மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பதிப்பிக்கப்பட்ட பிறகு தான் அந்தப் பிழைகள் கண்டுபிடிக்கப் பட்டன. சில இடங்களில் 80.17 என்று இருக்கவேண்டியது 80½ என்று இருந்தது. இப்படிப்பட்ட பிழைகள் திருத்தப்பட்டிருக் கின்றன. சில இடங்களில் சில மாநிலங்கள் கூட சேர்க்கப் பட்டிருந்தன; அவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் வெளியிடப்பட்ட பிறகு கண்டுபிடிக்கப்பட்ட அந்தப் பிழைகளைப் பொறுத்தவரையில், பிழைத் திருத்தங்கள் அச்சிடப்பட்டு எல்லா நூல்களிலேயும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

Abolition of Examinations up to Fifth Standard

* 34 *Q.*—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish examinations up to Fifth Standard;

(*b*) if so, the nature of the scheme to be introduced; and

(*c*) the period from when the new scheme is expected to come into operation?

ஐந்தாம் வகுப்பு வரை தேர்வுகளை ரத்து செய்தல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்தாம் வகுப்பு வரையில் தேர்வுகளை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், கொண்டுவரவிருக்கும் புதிய திட்டத்தின் விவரமென்ன?

(உ) இப்புதிய திட்டம் எப்போதிருந்து செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.